குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.54/2024

ம.சா.1

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27–ம் தேதி திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவிக்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | கந்தசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.28 மணி,

Complainant Ravikumar present. Advocate Mr.A.Sundaram present for Complainant. Accused Chellam Present. Advocate Mr.R.Kannan present for Advocate Mr.P.Ramasamy for an Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது மற்றும் அவருக்கும் என்னை நேரடியாக தெரியாது என்றால், சரியல்ல. எதிரி மற்றும் அவரது கணவர் சசி எனது சகோதரர் விஜயகுமார் என்பவரிடம் வேலை செய்து வந்து, வரவு செலவு வைத்துள்ளார்கள் என்றால், சரியல்ல. எனது அண்ணனிடம் வரவு செலவிற்காக கொடுத்த காசோலையை வைத்து இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) எதிரியை எனக்கு நேரடியாக தெரிந்திருந்தால் எனக்கு வரவேண்டிய வட்டித் தொகையையும் சேர்த்து இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பேன். அவ்வாறு செய்யாததால் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2023–2024 மற்றும் 2024–2025 ஆண்டுகளுக்கான வருமான வரி கணக்கை இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

3) எதிரிக்கு கடன் கொடுப்பதற்கான பொருளாதார தகுதி எனக்கு இல்லை என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கை பொய்யாக மற்றும் மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : **இல்லை.**

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.33 மணி.

Sd/.S.Sadhamhusain,
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.